**செய்தி வெளியீடுஎண்.57/2016 நாள்:25.11.2016**

**தமிழகத்தில் நகர்ப்புரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு.**

*******

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகப் பணிகள் குறித்து சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் இன்று (25.11.2016) விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்தில் குடிநீர் விநியோகப் பணிகளை மேற்கொண்டு வரும் நகராட்சி நிர்வாகம், பேரூராட்சிகள் துறை, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகர்ப்புரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் பொது மக்களுக்கு தங்கு தடையின்றி சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவித்து பின்வருமாறு அறிவுரைகளை வழங்கினார்.

- வடகிழக்கு பருவ மழை பெய்ய காலதாமதம் ஏற்பட்டுள்ள நிலையில், நகர்ப்புரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் வாழும் அனைத்து மக்களுக்கும் எவ்வித

பாதிப்புமின்றி குடிநீர் விநியோகத்தை தங்கு தடையின்றி வழங்க அனைத்து நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் எடுக்க வேண்டும்

❖ குடிநீர் விநியோகத்தை களப்பணியாளர்கள் அன்றாடம் ஆய்வு செய்வதையும் நல்ல முறையில் குடிநீர் வழங்குவதையும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

❖ தேவைக்கேற்ப குளோரின் கலந்த பாதுகாப்பான குடிநீரை அன்றாடம் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

❖ குடிநீர் தேக்க தொட்டிகள் மற்றும் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை சுத்தமாகப் பராமரிக்க வேண்டும்.

❖ சென்னையைப் பொருத்தவரை குடிநீர் விநியோகத்தை சீராக அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்க திட்டம் வகுத்து செயல்பட வேண்டும்.

❖ தனியார் விவசாய நிலங்களில் இருந்து தண்ணீர் எடுக்க கிணற்றுத் தளங்களை உடனடியாக முடிவு செய்ய வேண்டும்

❖ நீர்நிலைகளுக்கு அருகில் ஆழ் குழாய் கிணறுகளை அமைத்து, அதிக சக்திவாய்ந்த மின் மோட்டார்களைப் பொருத்தி குடிநீரை எடுத்து விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

❖ நெம்மேலி மற்றும் மீஞ்சூரில் அமைந்துள்ள கடல் நீரிலிருந்து குடிநீர் தயாரிக்கும் நிலையத்திலிருந்து 100 விழுக்காடு குடிநீரை தயாரித்து விநியோகம் செய்ய வேண்டும்.

❖ பழுது அடைந்துள்ள குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகள் விரைந்து முடிக்கப்பட வேண்டும்

❖ பயன்பாட்டில் இல்லாத பொதுக் கிணறுகளை தூர் வாரி சுத்தம் செய்து, குடிநீர் குடிப்பதற்கு தகுதியானது என்பதற்கு உரிய சான்று பெற்று பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

❖ பொறியாளர்கள் அனைவரும் அன்றாடம் குடிநீர் விநியோக நேரங்களில் களத்தில் நேர் ஆய்வு செய்து சீரான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

- குழாய் மூலம் குடிநீர் வழங்க இயலாத பகுதிகளில் லாரி மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் லாரிகள் செல்ல முடியாத குறுகிய சாலைகளில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சிறிய வாகனங்கள் மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- முக்கியமாக குடிசைப் பகுதிகளிலும், ஏழை மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளிலும் அதிக கவனம் செலுத்தி சீரான முறையில் குடிநீர் வழங்க வேண்டும்.

- தேவைப்படும் இடங்களில் குடிநீர்த் தொட்டிகளை வைத்து லாரிகள் மூலம் குடிநீர் அன்றாடம் வழங்கப்பட வேண்டும்

- லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் பொழுது, லாரியின் தகுதிச் சான்று, ஓட்டுநர் உரிமம், ஓட்டுநரின் முன் அனுபவம் ஆகியவற்றை தீர ஆய்வு செய்து லாரிகளை பாதுகாப்புடன் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- விபத்துகள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, குடிநீர் வழங்கும் லாரிகளில் வேகக் கட்டுப்பாட்டு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதை உறுதி செய்தும், அனைத்து லாரிகளும் 30 – 40 கிலோ மீட்டர் வேகத்தில் மட்டுமே இயக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

- ஒவ்வொரு பகுதியிலும் வார்டு வாரியாக குடிநீர் தொடர்பான புகார்கள் பதிவு செய்ய தொலைபேசி எண்கள் விளம்பரபடுத்தி தக்க நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

- நகர்ப்புரம் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்துத் தலைமை நீரேற்று நிலைங்கள் மற்றும் நீர் உந்து நிலையங்களை தொடர்புடைய அலுவலர்கள் குடிநீர் திட்டப் பணியாளர்களுடன் அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டும். அங்குள்ள மின்மோட்டார்கள், விசைப்பம்புகள் பழுதின்றி இயங்குவதை உறுதி செய்ய வேண்டும். மின் மோட்டார்கள் பழுதானால் மாற்று மின் மோட்டார்களை தயார் நிலையில் வைத்தல் வேண்டும்

- நீர் ஆதாரங்களில் நீர் மட்டம் குறைந்தால் தனியார் கிணறுகளையும், சமுதாயக் கிணறுகளையும் தூர்வாரி நீரின் தரத்தினை பரிசோதனை செய்து பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- கூட்டுக் குடிநீர் திட்டமாக இருப்பின் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுடன் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து குடிநீர் சீராக வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்

- குடிநீர் அனைத்து உள்ளாட்சிப் பகுதிகளுக்கும் சீராக வழங்கப்படுவதை தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் அலுவலர்கள் அன்றாடம் கண்காணிக்க வேண்டும்

- நீர் ஆதாரம் குறையும் பகுதிகளில் தலைமை பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர் நேரில் ஆய்வு செய்து மாற்று ஏற்பாடுகளை செய்ய நடவடிக்கை எடுத்து குடிநீர் பிரச்சணைக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட வேண்டும்

- ஊரகப் பகுதிகளைப் பொருத்தவரையில் திட்ட அலுவலர்கள், வாரம் ஒருமுறை அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொறியாளர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள் ஆகியோருடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி குடிநீர் பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட வேண்டும். மேலும் மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசனை செய்து தக்க நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

- திட்ட அலுவலர்கள், உதவி இயக்குநர்கள் (பஞ்சாயத்து) ஆகியோர் அவரவர் பகுதிகளில் மாவட்டந்தோறும் ஆய்வு செய்து குடிநீர் வழங்கல் பணி சீராக நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி,இஆப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் திரு. உறன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய முதன்மை செயலர்/ மேலாண்மை இயக்குநர் (பொ) திரு.விக்ரம் கபூர்,இஆப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.தீரஜ்குமார்,இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. ஜி.பிரகாஷ்,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு.கா.பாஸ்கரன்,இஆப., பேரூராட்சிகளின் இயக்குநர் (பொ) திரு.வி.ராஜாராமன்,இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை தலைமை பொறியாளர், அனைத்து மாநகராட்சிகளின் ஆணையர்கள், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய பொறியியல் இயக்குநர் மற்றும் பகுதி பொறியாளர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக

மண்டல பொறியாளர்கள், அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் செயற் பொறியாளர்கள்., ஊரக வளர்ச்சி துறை கூடுதல் இயக்குநர்கள், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்






இன்று (25.11.2016) சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகப் பணிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் திரு. உறன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய முதன்மை செயலர்/ மேலாண்மை இயக்குநர் (பொ) திரு.விக்ரம் கபூர்,இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.தீரஜ்குமார்,இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. ஜி.பிரகாஷ்,இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு.கா.பாஸ்கரன்,இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.